# தாரமங்கலம் நகராட்சி, நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அவசரக்கூட்டம்

**2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாத கூட்டத்தொடர் 18.10.2024 ஆம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு தாரமங்கலம் நகர்மன்றத்தின் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை :– திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகராட்சி மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

**பொருள் எண்.855(1)**

தாரமங்கலம் பேரூராட்சியானது அரசாணை (நிலை) எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) துறை நாள்.07.12.2021–ன் படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

தாரமங்கலம் பேரூராட்சியானது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை பகுதிகளை சாலை (4மீ மற்றும் அதற்கு மேல்) தெரு (3 முதல் 4மீ வரை), சந்து (3மீ குறைவாக) என தரம் பிரித்து அளவீடு செய்து UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தியதற்கிணங்க, இந்நகராட்சியானது, புதியதாக தரம் உயர்த்தப்பட்டு நகராட்சியாக செயல்பட்டு வந்த நிலையில் நகராட்சிக்கென்று உரிய நிலையான அலுவலர்கள் நியமனம் செய்யப்படாததாலும், பொறுப்பு அலுவலர்களைக் கொண்டு பணிகளை மேற்கொண்டு வந்ததாலும், Consultant மூலம் சாலை பதிவேடு தயார் செய்யப்பட்டு, UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், நகர்மன்ற உறுப்பினர்கள் பல்வேறு நகர்மன்ற கூட்டங்களில் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள சாலை பதிவேடு தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக விவாதங்கள் செய்யப்பட்டதை அடுத்து தற்போது உள்ள அலுவலர்கள் மூலம் சாலையினை மறு அளவீடு செய்வதில், அனைத்து வார்டுகளுக்குட்பட்ட சாலை அளவீடுகள் தவறுதலாகவும், சாலை மற்றும் தெரு, வகைபாடு மாறுதலாக உள்ளதை அளவீடு செய்யப்பட்டு, புதிய சாலை பதிவேடு கீழ்கண்டவாறு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| WARD | TOTAL LENGTH | | ABOVE 4M | 3 to 3.9M | BELOW 3M |
|---|---|---|---|---|---|
| | OLD | NEW | | | |
| WARD 1 | 3320 | 4556 | 4086 | 470 | 0 |
| WARD 2 | 3168 | 4388 | 4177 | 211 | 0 |
| WARD 3 | 5892 | 4483 | 3615 | 868 | 0 |
| WARD 4 | 6074 | 7343 | 5835 | 1048 | 460 |
| WARD 5 | 6150 | 6413 | 5795 | 618 | 0 |
| WARD 6 | 1627 | 1412 | 801 | 579 | 32 |
| WARD 7 | 1361.8 | 2202 | 1133 | 1069 | 0 |
| WARD 8 | 2779 | 3016 | 2716 | 300 | 0 |
| WARD 9 | 3790.98 | 4027 | 3241 | 786 | 0 |
| WARD 10 | 1067 | 1165 | 611 | 554 | 0 |
| WARD 11 | 831 | 1067 | 352 | 653 | 62 |
| WARD 12 | 1006 | 903 | 613 | 290 | 0 |
| WARD 13 | 1363 | 1160 | 700 | 429 | 31 |
| WARD 14 | 1545 | 1725 | 1566 | 159 | 0 |
| WARD 15 | 2749.62 | 1283 | 1128 | 155 | 0 |
| WARD 16 | 2126 | 4829 | 4829 | 0 | 0 |
| WARD 17 | 885 | 1178 | 482 | 574 | 122 |
| WARD 18 | 3674.79 | 2802 | 2121 | 326 | 355 |
| WARD 19 | 1402 | 1344 | 314 | 766 | 264 |
| WARD 20 | 1627 | 2005 | 1350 | 634 | 21 |
| WARD 21 | 2003.46 | 1520.7 | 254 | 1201.7 | 65 |
| WARD 22 | 780 | 2937 | 1309 | 971 | 117 |
| WARD 23 | 3491 | 4724.7 | 2711.9 | 1816.2 | 196.6 |
| WARD 24 | 2552 | 3935.8 | 3588.8 | 312 | 35 |
| WARD 25 | 3223 | 4564 | 3942 | 622 | 0 |
| WARD 26 | 1540 | 2409 | 2278 | 131 | 0 |
| WARD 27 | 2567 | 3241.2 | 1194 | 2047.2 | 0 |
| **TOTAL** | **68595.65** | **80633.4** | **60742.7** | **17590.1** | **1760.6** |

தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்ட சாலை பதிவேட்டினை மாற்றம் செய்து புதியதாக அளவீடு செய்யப்பட்ட சாலை பதிவேட்டினை UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,
நகர் மன்ற தலைவர்,
தாரமங்கலம் நகராட்சி,

// உண்மை நகல் //

ஆணையாளர்,
தாரமங்கலம் நகராட்சி.